## அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் - 2017

---

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று தலைவருக்கு 2018 ஒக்தோபர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 02**

(i) மீளாய்வாண்டின் போது வாகனங்களின் விற்பனைகளிலிருந்தான ரூபா 6,057,930 காசு வருமானம் நியமத்தின் 25(ஆ) பந்தியின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கொள்வனவுக்கான காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 26,753,844 தொகையொன்று பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், காசு மூலம் செலுத்துகை மேற்கொள்ளப்படாத ரூபா 9,803,454 தொகையொன்றை அது உள்ளடக்கியிருந்தது.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 07**

நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்தம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்படு ஆயட்காலத்தினை மீளாய்வு செய்திராமையின் காரணமாக சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் ரூபா 63,410,396 கிரயமுடைய சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தன. ஆகையினால், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 03 இன் பிரகாரம் மேற்குறித்த மதிப்பீட்டு பிழை சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - இலக்கம் 09**

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்புக்கள் கிரயம் அல்லது தேறக்கூடிய பெறுமதியின் தாழ்ந்த பெறுமதிக்கு கணக்கிடப்பட வேண்டிய போதிலும், பௌதீக இருப்பொன்றினை அவர்கள் கொண்டிராததுடன் 03 வருடங்களுக்கு மேலாக காலாவதியாகியிருந்த தேறக்கூடிய பெறுமதியொன்றிற்கு வருட இறுதியிலுள்ள இருப்புக்களாக ரூபா 64,973 தொகையான 03 இருப்பு மீதிகள் கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 02 வாகனங்களின் திருத்தங்களுக்கான ரூபா 259,000 பட்டியல்கள் செலுத்தப்பட்டிராத அட்டுறு செலவினங்களாக பதிவு செய்யப்பட்டிராமையின் காரணமாக, மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆண்டின் பற்றாக்குறை மற்றும் அட்டுறுச் செலவினங்கள் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) 03 நிலையான வைப்புக்களுடன் தொடர்புடைய மீளாய்வாண்டிற்கான ரூபா 364,095 தொகையொன்று பெறுமதியுடைய வட்டி வருமானம் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தின் நடைமுறைக் கணக்கொன்றில் பெறப்பட்ட ரூபா 686,153 நேரடி அனுப்புதல்கள் பேரேட்டுக் கணக்குகளில் இனங்காணப்பட்டிருக்காததுடன் சரிப்படுத்தல்கள் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மொத்த சம்பளம் ரூபா 67,030 ஆகக் காணப்பட்ட போதிலும், ஊழியரொருவர்க்கான மொத்த சம்பளம் ரூபா 670,030 எனும் அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையான பணிக்கொடை ஏற்பாட்டின் கணிப்பீடு காரணமாக, பணிக்கொடைக்கான ரூபா 6,331,500 மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) 119 இரசாயன இருப்பு வகைகளின் இருப்பு பெறுமதி மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 இல் உள்ளவாறான இறுதி இருப்பாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 05 வருடங்கள் கணக்கீட்டுக் காலப்பகுதிக்கும் மிகையான நான்கு கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 572,222 கூட்டுத்தொகையான பெறவேண்டிய மீதிகளினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 வருடங்கள் காலப்பகுதிக்கும் மிகையான நான்கு முற்பணக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 321,174 கூட்டுத்தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்யப்பட்டிராது மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் ரூபா 268,724 செலுத்தப்படாத சம்பளங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அபிவிருத்தி செயற்திட்டங்களின் பயனாளிகளுக்கு சலுகை விகிதத்தில் அரிசி நீராவி அலுமினிய உபகரணத்தின் விற்பனைக்கு கமத்தொழில் அமைச்சு பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 4,318,284 பங்களிப்புப் பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டிராது 2009 ஆம் ஆண்டிலிருந்து நிதி நிலைமைக் கூற்றில் பொறுப்பொன்றாக பதிவுசெய்யப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பனவு செய்வற்கு 2018 ஆகஸ்ட் 30 வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

அட்டுறு செலவினம் முறையே ரூபா 6,458,146 மற்றும் ரூபா 5,924,468 ஆகக் காணப்பட்டமையினால், திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களுக்கிடையே ரூபா 533,678 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) 570 ஆம் இலக்க மற்றும் 571 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | 2009 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியின் போது வியாபித்திருந்த ரூபா 134,500 விலை மனு வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிக்கவில்லை. |
| (ii) 756 ஆம் இலக்க நிதிப் பிரமாணம் | ரூபா 1,002,498 தொகையுடைய 6 வகையான இருப்புக்கள் தொடர்பில் வருடாந்த அளவைச் சபையின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 10 ஆம் இலக்க பந்தி | 2016 மற்றும் 2017 இல் அழிக்கப்பட்ட வாகனங்களினை அகற்றியதிலிருந்து பெறப்பட்ட ரூபா 6,057,930 காசு வருமானத்தினை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ஒன்றிணைந்த நிதியத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஏற்பட்ட ரூபா 107,828 செலவினத்தை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்திராது மீளாய்வாண்டின் போது 10 உத்தியோகத்தர்களினால் எடுக்கப்பட்ட ரூபா 217,000 முற்பணங்களிலிருந்து தங்குமிட பற்றுச்சீட்டுக்களினை தீர்ப்பனவு செய்வதற்கு முறையானதொரு அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்ப்பனவுசெய்யப்படாத முற்பணங்களாக அது பதிவு செய்யப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் தொழிற்பாடுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 9,506,446 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 8,193,072 பற்றாக்குறையொன்றை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,313,374 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சுயமாக உழைத்த வருமானம் ரூபா 5,011,467 இனால் அதிகரித்தமை மேற்குறித்த வளர்ச்சிக்கு பிரதான காரணியாகயிருந்தது.

ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை சரிப்படுத்திய பின்னர் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் பங்களிப்பில் வளர்ச்சியொன்று நிரூபிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் பங்களிப்பு முறையே ரூபா 97,592,080 மற்றும் ரூபா 81,224,945 ஆகக் காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "Estimation of heave metal Contamination in some popular Vegetables grown in different districts of Sri Lanka" என்ற ஆராய்ச்சிக்கான இறுதி அறிக்கைகள் 2018 ஆகஸ்ட் 30 ரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2018 மார்ச்சில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட "Studies of wine production from locally available groups" என்ற ஆராய்ச்சிக்கான இறுதி அறிக்கைகள் 2018 யூன் 30 வரையிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிவாரி நிறுவனங்களை புலனாய்வு செய்வதற்கு கடந்த முன்னைய 04 ஆண்டுகளின் போது அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிர்வாகத்தினால் 05 பாரிய செயற்திட்டங்கள் அமுல்படுத்த கவனம்செலுத்தப்பட்டிருந்த போதிலும், பெறுகை நடைமுறைகளினைப் பின்பற்றியிராமை மற்றும் வெளிப்படையான தன்மையினை அமுல்படுத்தத்தவறியமை காரணமாக, பரிந்துரைகள் மற்றும் புலனாய்வுகளுக்கு பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் தொடர்பில், 2018 யூன் 30 வரை கமத்தொழில் அமைச்சு நடவடிக்கைகளினை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பயனாளிகளிடமிருந்து 50 சதவீதத்துடனான பகிர்ந்தளிப்புக்களுடன் நிறுவகத்திற்கு உரிமைத்துவத்தினைப் தக்கவைத்துக் கொள்ளும் உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கமத்தொழில் அமைச்சின் மூலதன மானியத்தின் கீழ் பெறப்பட்ட பணத்திற்கு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் ரூபா 16,076,078 மதிப்புடைய உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் கணக்கீட்டு நோக்கத்திற்கு மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 05 மாதங்களுக்கு மேலாக பரீட்சார்த்தரீதியான (Trial version) மென்பொருளொன்றாக நிறுவகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளினை அனுமதிபெற்ற உத்தியோகபூர்வ மென்பொருளாக மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 07 உணவு வகைகளில் 04 கனரக உலோக கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதா என மதிப்பிடுதவதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,956,120 கிரயமொன்று நேரிட்டதன் மூலம் 500 மாதிரிகளினை பரீட்சிப்பதன் மூலம் இனங்காணப்பட்ட விளைவுகளினை கமத்தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கு சமர்ப்பித்திராது அறிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. ஆனால், செயற்திட்டத்தின் செலவினத்திற்கு அமைச்சிடமிருந்து ரூபா 5,350,000 மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) நிறுவகத்தின் வாகனங்களின் தேவைக்கு நிறுவகத்திற்கு கமத்தொழில் அமைச்சிடமிருந்து 06 கெப் வண்டிகள் மற்றும் 01 ஜீப் வண்டி, பெறப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்திற்கு முரணாக மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி திருத்தத்திற்கு தனியார் துறை மோட்டார் வண்டி பழுதுபார்க்குமிடத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் நிறுவகத்தின் தேவைப்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 2018 மே 30 வரை திருத்தஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆராய்ச்சிகளினை மீளாய்வதற்கு தேவையான பரிந்துரைகளினை வழங்குவதற்கு மற்றும் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வுகள் பூர்த்தியான பின்னர் தொழில்நுட்பத்தினை வெளியிடும் பொருட்டு செயற்படும் ஆராய்ச்சியினை வெளியிடும் குழு மீளாய்வாண்டிற்கு குறைந்தது ஒரு தடவையேனும் கூட்டங்களினை நடாத்தியிருக்கவில்லை.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டுடைய சொத்துக்கள்

---

Gas Chromatography Mass Spectrometry System (GCMS) என்னும் பெயருடைய ரூபா 15.2 மில்லியன் மதிப்புள்ள உபகரணம் 2014 ஆம் ஆண்டின் திசெம்பரில் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மேற்குறித்த காலப்பகுதியின் போது இந்த உபகரணத்தினை பழுதுபார்ப்பதற்காக நிறுவகத்திற்கு ரூபா 536,255 செலவினமொன்று ஏற்பட்டிருந்த அதேவேளை, ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 வருடங்கள் காலப்பகுதிக்கு மேலாக விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உரிய திகதிகளில் பட்டியல்களினை செலுத்தியராமையின் காரணமாக நீர் மற்றும் மின்சாரப் பட்டியல்களினை செலுத்தும் பொழுது நிறுவனத்தின் நிதியினால் ரூபா 45,532 தாமதக்கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

## 4.6 ஆளணி நிர்வாகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் அத்தியாயம் II இன் 15.1(II) ஆம் பந்தி மற்றும் உத்தியோகத்தரொருவரின் சம்பள மட்டத்தினை தீர்மானிக்கையில் சம்பளத்தின் 4 ஆவது படியினை அடைவதற்கு முன்னர் வினைத்திறமைக்காண் தடைப் பரீட்சைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திலுள்ள ஏதேனும் ஊழியர் வகைக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமல் தகுதிகாண் காலத்திலுள்ள உத்தியோகத்தர் 03 வருடங்களுக்கு மேற்பட்ட பின்னர் உறுதிப்படுத்தல், பதவியுயர்த்துதல், வேதன அதிகரிப்பு வழங்குதல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

# 5. நிலைபேறான அபிவிருத்தி

## 5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினை அடைந்துகொள்ளுதல்

ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டின் நிலைபேறான அபிவிருத்தி ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம் அனைத்து பொதுத்துறை நிறுவகங்களும் செயற்பட வேண்டிய அதேசமயம் மீளாய்வாண்டிற்கு அவர்களின் நோக்கெல்லையின் கீழ் காணப்படுகின்ற கடமைப் பொறுப்புக்களினை செயற்படுத்தும் வழிவகை பற்றி அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்கங்களினை இனங்காண்பதன் மூலம் பயனாளிகளாக பொதுவாக இனங்காணப்பட்ட அரிசி செயன்முறையாளர்கள், கமத்தொழில் அமைப்புக்கள் மற்றும் அரசாசார்பற்ற அந்த அமைப்புக்களினூடாக அந்த அமைப்புக்களுடன் விபரிக்கப்பட்ட பங்கேற்பு ரீதியான அணுகுமுறையொன்றினூடாக குறித்துரைக்கப்பட்ட அமைப்புக்கள் இனங்காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

# 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாம்பழ விநியோக பெறுமதிச் சங்கிலி முகாமைத்துவ செயற்பாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு பொதியிடல் பெட்டிகளினை வடிவமைத்தல் மற்றும் விநியோகத்திற்கு விலைமனுவினை மதிப்பிடுகையில் போக்குவரத்து செலவினங்களினை புறக்கணித்து அலகு விலையினை மாத்திரம் கருத்திற்கொண்டு குறைந்த விலையுடைய விலைமனுதார்க்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதிலிருந்து ஒப்பந்த விலையினை மிகைத்து ரூபா 63,673 இனை நிறுவகம் செலுத்தியிருந்தது.

(ஆ) பப்பாசி விநியோக பெறுமதிச் சங்கிலி முகாமைத்துவச் செயற்பாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு விலைமனுவினை அழைக்கையில் ஒரு வாரத்திற்குள் 4,000 பொதியிடல் பெட்டிகளின் வடிவமைப்பு மற்றும் விநியோகத்தின் நிபந்தனையொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், 4 வாரங்கள் காலத்தினுள் விநியோகிக்கும் முதல் தகுதியான குறைந்தளவான விலையினையுடைய விலைமனுதாரினை நிறுவகம் நிராகரித்திருந்ததுடன் அதற்கு அடுத்த குறைந்தளவான விலையினையுடைய விலைமனுதாரர்க்கு அளித்திருந்தது. முதலாவது தகுதியையுடைய தாழ்ந்த விலையுடைய விலைமனுதாரரினை நிராகரித்தமை மற்றும் அடுத்த தாழ்ந்த விலையுடைய மனுதாரர் விநியோகத்திற்கு 2 மாதங்கள் காலம் எடுத்திருந்தமை காரணமாக நிறுவகம் ரூபா 801,760 நட்டமொன்றை தாங்கிக்கொண்டது.

(இ) பெறுகை வழிகாட்டலின் 2.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் கட்டிடங்களினைப் பெற்றுக் கொள்ளும் போது முழுமையான குத்தகை பிரகாரம் குத்தகை தொகைக்கு பெறுகை எவ்லையினை தீர்மானிக்கையில் அது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய போதிலும், 5 வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கு ரூபா 28.5 மில்லியன் குத்தகைத் தொகைக்கு பெறுகை எல்லையினை தீர்மானிக்கையில் அமைச்சரவை பெறுகைக் குழு கவனஞ்செலுத்தவேண்டிய போதிலும் கொழும்பு அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றினைப் பெற்றுக்கொள்வற்கு வழிகாட்டிய பணிப்பாளர் சபையின் பெறுகைத் தீர்மானத்தினை மீறி 1 வருடம் மற்றும் 6 மாதங்கள் காலப்பகுதியொன்றிற்கு ரூபா 8.5 மில்லியனுக்கு வாடகை அடிப்படையில் கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு சிறிய திணைக்கள விலைமனுச் சபை தீர்மானித்திருந்தது.

## 6.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2010 ஆகஸ்ட் 19 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு கூட்டத்தின் பிரகாரம், நிறுவகம் மேற்கொண்ட ஆராய்ச்சிகள் தரமுடையனவாகவும் தொழில்சார் மட்டத்தில் அமைந்ததாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கு, நிறுவகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி ஆலோசனை குழு ஒரு ஆண்டில் குறைந்தது 4 தடவைகளாவது கூட்டங்களை நடாத்தி ஆராய்ச்சிகளுக்கான முன்மொழிவுகளை வழங்கி செயல் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யவும் வேண்டும் என பணிப்புரை வழங்கப்பட்டது. ஆனால் மீளாய்வாண்டிற்குரிய 15 ஆராய்ச்சி தொடர்பாக மதிப்பீடு செய்வதற்காக மீளாய்வாண்டில் ஆராய்ச்சி ஆலோசனை குழு குறைந்தது ஒரு தடவையேனும் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) ஆராய்ச்சிக் கட்டுப்பாடு | (i) நிறுவகதினால் செயற்படுத்தப்பட்ட ஆராய்ச்சியின் மீது ஆராய்ச்சி வழிகாட்டல்களின் உறுப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (ii) | ஆராய்ச்சி ஆலோசனை சபையிடமிருந்து அறிவுறுத்தல்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | ஆளணி நிர்வாகம் | (i) | நிறுவகத்தின் ஆளணியினர் தொடர்ச்சியான பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு சமூகமளித்திருக்கவில்லை. |
| | | (ii) | வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளினை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஆய்வுகூடக் கட்டுப்பாடு | (i) | நிறுவகத்தின் ஆய்வுகூடம் தரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | ஆய்வுகூட உபகரணம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | ஆய்வுகூட இருப்புக்களுக்கு இருப்புக் கணக்கெடுப்பொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | விடுதிக் கட்டுப்பாடு | | தொடர்ச்சியானதொரு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினைப் பயன்படுத்தி விடுதி வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |